**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

**முன்னிலை : திருமதி.எ..சுவேதா,** B.B.A., L.L.B (Hons)

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

**2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**அசல் வழக்கு 76/2013 ல் இடைமனு எண்.173/2026**

குமார் ,..... மனுதாரர் / 2 ம் பிரதிவாதி

/எதிர்/

1. ஜோதி

2. சதாசிவம் ...... எதிர்மனுதாரர்கள்/ வாதி /1ம் பிரதிவாதி

மனுதாரர் தாக்கல் செய்த இம்மனு என் முன்னர் கடந்த 20.7.2025 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பி.டி.ஜானகி அவர்கள் முன்னிலையாகியும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.ஞானமணி, அவர்கள் முன்னிலையாகியும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகளையும் கேட்டறிந்தும் இதுநாள்வரை என்னுடைய பிரசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ,,,,,,,,,

**உத்தரவு**

9.6.2026 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் 9 விதி 7ன் கீழ் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனு.

2. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்-

இம்மனுவின் மனுதாரர் 2ம் பிரதிவாதி என்றும் இந்த மனு எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் மேலும் இந்த மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் இரண்டாம் பிரதிவாதியாக தற்போது புதிதாக தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் இந்த 1ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார் 2ம் எதிர்மனுதாரர் 1ம் பிரதிவாதி என்றும் அசல் வழக்கு நிரந்தர உறுத்து கட்டளைக்காக இதர பரிகாரங்களுக்காகவும் இந்த 1ஆம் எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கில்

பிரதிவாதி எதிர் வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருவதாகவும் இதற்கு இடையில் இந்த வாதி வழக்கை இரண்டு முறை தள்ளுபடிக்கு விட்டு விட்டு தற்பொழுது மீண்டும் கோப்புக்கு எடுக்க மனு கொடுத்து கோப்புக்கு எடுக்கப்பட்டு வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது மனுதாரரை இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்க கோரி மனு கொடுத்துள்ளதாகவும் அம்மனு அனுமதிக்கப்பட்டு அடிப்படையில் மனுதாரர் இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு-ள்ளதாகவும் அதை தொடர்ந்து மனுதாரர் தரப்பு எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு கடந்த 9.6.2026 இல் வைக்கப்பட்டது என்றும் இவ்வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நகல்கள் மனுதாரருக்கு எதுவும் கிடைக்கவில்லை என்றும் அதைத்தொடர்ந்து தன்னால் உடனடியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் மேலும் தனக்கு கடந்த 8.6.2026 தேதிகளில் சிறிது உடல்நிலை சரியில்லாமல் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு வீட்டிலேயே இருந்து கை வைத்தியம் செய்து கொண்டதாகவும் அதனால் தனது வழக்கறிஞரை உரிய நேரத்தில் சந்தித்து தனது தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் தற்பொழுது சிறிது உடல்நிலை தேறியதும் தனது வழக்கறிஞரை சந்தித்தபோது கடந்த 9.6.2026 ன் மனுதாரர் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் தன்னை கூப்பிட்டு ஒருதலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற விவரம் அறிந்ததாகவும் தான் மற்றபடி வேண்டுமென்று அலட்சியமாகவும் இருந்துவிடவில்லை என்றும் தனது தரப்பில் இத்துடன் எனது எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் மனுதாரருக்கு அசல் வழக்கில் கூடி வரக்கூடிய வலுவான கட்சிகள் உள்ளது என்றும் வழக்கு சொத்து தனக்கு பாக்கியமான அனுபவமான சொத்தாகும் என்றும் வழக்கு சொத்து தனது அனுபவத்தில் இருந்து வருவதாகவும் இந்த வாதித்தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யான வழக்காகும் என்றும் அதனை விசாரணையில் நிரூபிக்க தயாராக இருப்பதாகவும் எனவே கடந்த 9.6.2026 இல் ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்து கொண்டு மேல் உத்தரவு செய்ய வேண்டி இருக்கிறது என்றும் அப்படிக்கு இல்லாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் எனவே 9.6.2026 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்-

மனுதார் தாக்கல் செய்துள்ள மனு சுத்த தப்பும், பொய்யும், மேசடியுமானது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடிக்கு அருகமானது என்றும் இம்மனு வழக்கின் விசாரணையை தேவையில்லாமல் தாமதப்படுத்தும் நோக்கத்துடன் செய்யதுள்ளார் என்றும் மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு 09.06.2026 அன்று நீதிமன்றத்தில் ஆஜராக முடியாததற்கு கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் பொய்யானவை மற்றும் ஆதாரமற்றவை என்றும் மனுதாரருக்கு வழக்கு விசாரணை தேதி குறித்து தெரிதிருந்தும் தீயநோக்கமுடன் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளனர் என்றும் இவ்வழக்கில் மனுதாரர்களுக்கு பலமுறை வாய்ப்பு வழங்கப்பட்டபோதும், தொடர்ந்து அலட்சியம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றும் இதனால் இந்நீதிமன்றம் 09.06.2026 அன்று மனுதாரர்களுக்கு எதிராக ex-parte ஆணை பிறப்பித்துள்ளது என்றும் மனுதாரர்கள் இப்போது கூறும் காரணங்கள் எந்தவிதமான நம்பகமான ஆவண ஆதாரங்களாலும் நிரூபிக்கப்படவில்லை என்றும் வெறும் காரணங்களை மட்டும் கூறி நீதிமன்றத்தின் சட்டபூர்வமான ஆணையை ரத்து செய்ய முடியாது என்றும் மனுதாரர்கள் கலந்து கொள்ள உண்மையிலேயே வழக்கில் விருப்பமுள்ளவர்களாக இருந்தால், அவர்கள் முன்பே நீதிமன்றத்தில் ஆஜராகி தங்களது உரிமையை பயன்படுத்தியிருப்பார்கள் என்றும் தற்போது வழக்கு முன்னேற்றத்தில் இருக்கும் நிலையில் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது தீங்கிழைக்கும் நோக்கத்துடனே ஆகும் என்றும் மனுதாரர்களுக்கு அசல் வழக்கில் கூடிய வரக்கூடிய நல்ல கட்சி ஏதும் இல்லாததால் வழக்கை இழுத்து அடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணதுடண் பொய்யான அம்சங்களை கொண்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மனுதாரர்களின் செய்கை சட்டத்துக்கும் நியாயத்துக்கும் முரணானது என்றும் எனவே மனுவினை தள்ளுபடி செய்ய கோரியுள்ளார்.

4. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் No counter endorse செய்யப்பட்டுள்ளது.

5, இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

6. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதேயாகும்.

7, மனுவினை பரிசீலனை செய்து பார்க்கும்போது வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது மனுதாரரை இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்க கோரி மனு கொடுத்து அதன் அடிப்படையில் மனுதாரர் இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அதை தொடர்ந்து மனுதாரர் தரப்பு எதிர் வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு கடந்த 9.6.2026 இல் வைக்கப்பட்டது என்றும் இவ்வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் நகல்கள் மனுதாரருக்கு எதுவும் கிடைக்கவில்லை என்பதால் உடனடியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் மேலும் மனுதாரருக்கு கடந்த 8.6.2026 தேதிகளில் சிறிது உடல்நிலை சரியில்லாமல் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு வீட்டிலேயே இருந்து கை வைத்தியம் செய்து கொண்டதாகவும் அதனால் தனது வழக்கறிஞரை உரிய நேரத்தில் சந்தித்து தனது தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் அதனால் 9.6.2026 ல் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் தன்னை கூப்பிட்டு ஒருதலை பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அந்த ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எதிருரையில் 1ம் எதிர்மனுதாரர் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் ஏற்கும்படியாக இருந்தாலும் இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கில் பிரதிவாதிக்கு தனது தரப்பை நிருபணம் செய்ய ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதே நீதிக்கு உகந்ததாக இருக்கும்.

இறுதியாக, மனுதாரர் தாக்கல் செய்த இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 28 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-E.Swetha)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சிதம்பரம்